**கவனிக்க.**-*2020.11.13 ஆந் திகதிய 2202 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2203 - 2020 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2020.11.20

*2203 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1724* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1726* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1721-B 82079-5,403 (2020/ 11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், அநுராதபுரம்

*மஹோபாத்தியாய (துணை வேந்தர்) பதவிக்கு விண்ணப்பங்கள்/முன்மொழிவுகளுக்கான அழைப்பு*

*1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகத்தின் திட்டத்தில் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம் மற்றும் 2020, மே 04 ஆந் திகதிய 02/ 2020 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டின்படி பின்வரும் தகைமைகளைக் கொண்ட தகுதியுடைய பிக்குகளிடமிருந்து மஹோபாத்தியாய பதவிக்காக விண்ணப்பங்கள் அல்லது முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.*

1. பௌத்த கற்கைகளில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட வேறு எந்த பாடத்திலேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத காலம் ஒன்றில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருத்தல்.
2. கற்பித்தல் துறையில் பத்து ஆண்டுகள் அனுபவம்;
3. கீழைத்தேய மொழிகளில் சிறந்த அறிவைப் பெற்றிருத்தல்;
4. உபசம்பதாவுக்குப் பின் இருபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்த ஒரு ஒழுக்கமான உபசம்பதா பிக்குவாக இருத்தல் வேண்டும்.

மூன்று (03) ஆண்டு காலத்திற்கு மஹோபாத்தியாய பதவிக்கு நியமிக்கப்படுவார். அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அதிகாரியாகவும், தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும், தலைமை கல்வி அதிகாரியாகவும், இருப்பார். மஹோபாத்தியாய உத்தரீதர சபாவவின் பதவிநிலை உறுப்பினராகவும் சபை மற்றும் செனட் இரண்டிலும் தலைவர் மற்றும் பதவிநிலை உறுப்பினராகவும் இருப்பார். அவர் பல்கலைக்கழகத்திற்குள் ஒழுக்கத்தை பேணுவதற்கு பொறுப்பாக இருப்பார். சபையின் எந்தவொரு தீர்மானம் அல்லது வழிகாட்டலுக்கு அமைய மஹோபாத்தியாய பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அதிகாரியாக இருப்பார். சபை மற்றும் செனட்டின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு அல்லது நடைமுறைப்படுத்துவது மஹோபாத்தியாயவின் பணியாகும். மஹோபாத்தியாய மூன்று ஆண்டு பதவிக்காலம் அல்லது அவரது அறுபத்தி ஐந்தாவது வயது பூர்த்தியாகும் வரையான முதலில் வரும் நிகழ்வு வரை பதவி வகிப்பார்.

விண்ணப்பதாரிகள்/முன்மொழியப்படுபவர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் உயர் சம்பள அளவை பெறுவதற்கு மஹோபாத்தியாய தகுதியுடையவராக இருப்பதோடு அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அவருக்கு எரிபொருள் கொடுப்பனவுடன் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று மற்றும் பல்கலைக்கழக வளவில் குடியிருப்பு வசதிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பம்/முன்மொழிவுகளுடன் பின்வரும் ஆவணங்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

(i) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரி/முன்மொழியப்படுபவரின் முழுமையான சுயவிபரக்கோவை.

(ii) பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான நோக்கு பற்றிய தனிப்பட்ட அறிக்கை ஒன்று மற்றும் மஹோபாத்தியாய பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் அடைவுக்காக எதிர்பார்ப்புகள் பற்றி சுருக்கமான பதிவு ஒன்று.

(iii) ஒரு முன்மொழிவாக இருந்தால் முன்மொழியப்படுபவரிடம் இருந்து ஒப்புதல் கடிதம்.

(iv) விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கு அப்பால் உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவராக இருக்கும் நேரத்தில், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர்/முன்மொழியப்படுபவரை விடுவிப்பது தொடர்பில் தொழில் வழங்குநரிடம் இருந்து ஒரு கடிதம்.

(v) பதவியில் உள்ள துணைவேந்தர் ஒரு விண்ணப்பதாரராயின் அல்லது அவர் இதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை வகித்திருந்தால் அவ்வாறான ஒரு விண்ணப்பதாரர் தமது முதல் பதவிக் காலத்தில் செய்தவற்றை குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

அபேட்சகர் மூலம் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில், மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட பிக்கு விண்ணப்பதாரர்கள்/முன்மொழியப்படுபவர்களில் இருந்து மூன்று பெயர்களை சபை பரிந்துரைக்கும். அந்தப் பெயர்கள் உயர்பீட சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின் உயர்பீட சபை தேர்வு செய்து கௌரவ அமைச்சர் மூலம் H. E. தலைவருக்கு ஒரு பிக்கு அபேட்சகரின் பெயரை பரிந்துரைக்கும்.

மதிப்பீட்டுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்டு குறைந்தபட்சம் பத்து (10) நிமிட காலம் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாத அறிமுகப்படுத்தல் ஒன்றுக்காக பல்கலைக்கழக சபைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள்/முன்மொழிவுகளை "பதிவாளர், இலங்கை பிக்கு பல்லைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம்" என்று முகவரி இடப்பட்டு 2020, திசெம்பர் 04 ஆந் திகதி பி. ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பம்/முன்மொழிவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மஹோபாத்தியாய பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமைபெறாத மற்றும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

யூ. டி. தொடன்வல,
பதிவாளர் மற்றும் சபைச் செயலாளர்,
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

2020.10.25.

11-342

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கான தலைவர் பதவி

நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கான தலைவர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2020.10.02 ஆந் திகதிய 2196 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 10-399 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 2020, நவெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து 2020, திசெம்பர் 18 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

எச். சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு-12,
2020, நவெம்பர் 12.

11-344

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### இலங்கை நீதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

இலங்கை நீதிச்சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குரிய நீதிச்சேவை அலுவலர் (நீதவான்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2020.10.02 ஆந் திகதிய 2196 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 10-264 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 2020, நவெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து 2020, திசெம்பர் 18 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

எச். சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு-12,
2020, நவெம்பர் 11.

11-345

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் I வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2015 (2020)

*1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பந்தியின் கீழான ஏற்பாடுகளுக்கு அமைய மொழிபெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தோற்றுவதற்கு முடியும். பரீட்சை தொடர்பாக விண்ணப்பித்த மொழிமூலம் பின்னர் மாற்றியமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலுக்கு அமைய குறித்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவையின் இணைந்த சேவைகளுக்கு உரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.*

**குறிப்பு** : *இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு நிகராக மாகாண அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் குறித்த மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலமும், ஏனைய குறித்த நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தொடர்பான ஏற்பாடுகள் அந்நிறுவனங்களின் மூலமும் வெளியிடப்படும்.*

*அந்தந்த மாகாண அரசாங்க சேவையின் அலுவலர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களது விண்ணப்பங்களை வேறு பிரித்துக் கொள்வதற்காக விண்ணப்பத்தின் தலைப்பில் குறித்த சேவை அல்லது நிறுவனம் பற்றிக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கமொன்று உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய இணைந்த சேவைக்குரிய அலுவலர்களின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் நீங்கள் உரித்தாகும் சேவை எனும் இடத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

*2. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தத்தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2020, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*03.* (i) *விண்ணப்பத்தின் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 4.2 வரை முதலாவது பக்கத்திலும், மீதி இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பங்கள்* "A4" *தாளில் இருபக்கங்களிலும் அடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிட்டு தயாரித்துக்கொள்ள முடியுமாயினும், அது விண்ணப்பதாரியின் கையெழுத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரிப் படிவத்தை ஒத்திராத மற்றும் பூரண விபரங்கள் அடங்கப்பெறாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.*

(ii) *அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கங்களுக்காக சகல விண்ணப்பதாரிகளும் தத்தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியிலேயே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், அவை அதே மொழியிலேயே நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

04. பாடவிதானமும், பரீட்சை நடைமுறையும் -

**முதலாவது பாடம் - வினாத்தாள் இல. 01**

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்

(ii) (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றின் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் மற்றும்

(ஆ) பத்திரிகையில் அல்லது ஆக்கமொன்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றவாறு தெரிவு செய்யப்படும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு

(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு

(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு

03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் - 100 புள்ளிகள்

**இரண்டாம் பாடம் - வினாத்தாள் இல. 02**

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்

(ii) (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றின் அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் ; மற்றும்

(ஆ) பத்திரிகையின் அல்லது ஆக்கமொன்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றவாறு தெரிவுசெய்யப்படும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்.

(i) தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு

(ii) ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு

(iii) ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு

03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் - 100 புள்ளிகள்

* இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

06. **பரீட்சைக் கட்டணங்கள் :-**

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும்.

(அ) முதற் தடவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது;

(ஆ) அதன் பின்னர் ஒரு தடவைக்கான முழுப்பரீட்சைக் கட்டணம் ரூபா 500.00 செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்திற்கு ரூபா 250.00 செலுத்தப்பட வேண்டும் ;

(இ) பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்து நாட்டிலுள்ள எந்தவொரு தபாலகத்தில்/ உபதபாலகத்தில் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றவோ இடமளிக்கப்படமாட்டாது.

07. **பரீட்சைக்கு அனுமதித்தல்:-**

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் உள்ள வயதெல்லைக்குள் உள்ள, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2-3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரியாயின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையில் விசாரித்தல் வேண்டும்.

(ii) அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ் விபரங்களுடன், பெக்ஸ் (தொலைநகல்) ஊடாக அனுமதிப்பத்திரத்தின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் உள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம்வசம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாயின் அப்பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பனவற்றினை தயார்படுத்திக் கொள்வது பிரயோசனமாகும்.

(iii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வெவ்வேறாக அனுமதி அட்டையுடன் நேரசூசியும் அனுப்பி வைக்கப்படும்.

(iv) இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும், பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக வேண்டி ஏற்படும்.

(v) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதனூடாக ஒரு விண்ணப்பதாரி அப்பரீட்சையில் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

08. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

09. பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தினால் மறுப்புத் தெரிவிக்கப்படின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறும் பரீட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் வழங்கப்படமாட்டாது.

10. பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல் - பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அத்தோடு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் மற்றும் இணக்கமின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவானதாகும்.

எஸ். ஆலோகபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2015 (2020)**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS I OF THE GOVERNMENT TRANSLATORS' SERVICE - 2015 (2020)

(கவனிக்க வேண்டியது : விண்ணப்பப்படிவம் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்)

உங்களுக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த இவ் வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்தியைப் பார்க்கவும்) பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் இடவும்.

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இற்கு அமைய நீங்கள் மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய முறை

வினாத்தாள் இலக்கம் 01:-
- சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு – 1
- சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு – 2
- தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு – 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

வினாத்தாள் இலக்கம் 02:-
- தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு – 4
- ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு – 5
- ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு – 6

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

* வினாத்தாள் இலக்கம் 01 அல்லது வினாத்தாள் இலக்கம் 02 அல்லது இரு வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

1.0 தனிப்பட்ட தகவல்கள்:

1.1 முழுப் பெயர் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்:- ..................................................
(உதா:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-
..................................................
(உதா:- GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..................................................

2.0 சேவை நிலையம் மற்றும் முகவரி :

2.1 அலுவலக/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..................................................

2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..................................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..................................................

3.0

3.1 தேசிய அடையாள அட்டை இல:

3.2 பிறந்த திகதி: ஆண்டு: மாதம்: திகதி:

3.3 பால்: பெண் – 1
ஆண் – 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

4.0 தொலைபேசி இலக்கம்:

4.1 கையடக்கத் தொலைபேசி:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4.2 நிலையான தொலைபேசி:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5.0 தற்போது வகிக்கும் பதவி

5.1 பதவி:.........................................................

5.2 நியமனக் கடிதத்தின் இல.:.........................................................

6.0 6.1 நீர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றீரா? :.........................................................

6.2 இல்லாவிட்டால், செலுத்திய பரீட்சைக் கட்டணம் :.........................................................

6.3 தபால்/உப தபால் அலுவலகம் அல்லது மாவட்ட/பிரதேச செயலகம் :..........................................

6.4 பற்றுச் சீட்டின் இலக்கம்: .........................................................

6.5 திகதி: .........................................................

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக் கொள்ளவும்.)

7.0 விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

மேற் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், விண்ணப்பப்படிவத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகிறேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:.......................

8.0 திணைக்களத் தலைவரின் சான்றிதழ்-

(i) இவ் விண்ணப்பதாரி இத் திணைக்களத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த இணைந்த சேவைக்குரிய மொழி பெயர்ப்பாளர் என்றும் ;
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் ;
(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் ;
(iv) இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் ;
(v) இவரால் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் இத்தால் நான் சான்றுபடுத்துகின்றேன். (தேவையற்றது எனின் கீறிவிடவும்)

...................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :.......................
முகவரி :.......................
திகதி :.......................

11-309

**விவசாய அமைச்சு**

**விவசாயத் திணைக்களம்**

விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இலிகிதர்/விதை தொழில்நுட்பவியிலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2020

*விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இலிகிதர்/ விதை தொழில்நுட்பவியிலாளர் பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.12.15 ஆகும். அன்றைய தினத்தில் விண்ணப்பதாரியின் வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்க மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*3. பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அபேட்சகர்கள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

| *பதவிகளுக் குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *03.1 கல்வித் தகைமைகள்* | *03.2 தொழிற் தகைமைகள்* | *மேலதிக தகைமைகள்* |
|---|---|---|---|---|
| *1* | *பண்ணை முகாமையாளர்* | *i. க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணித பாடத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;*<br><br>*அத்துடன்*<br><br>*ii. க. பொ. த. (உ/த) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தில் (பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.* | *அவசியமற்றது* | *உரிய துறையில் உள்ள அனுபவம்* |

| பதவிகளுக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 03.1 கல்வித் தகைமைகள் | 03.2 தொழிற் தகைமைகள் | மேலதிக தகைமைகள் |
|---|---|---|---|---|
| 2 | விதை தொழில் நுட்பவியலாளர் | i. க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணித பாடத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>அத்துடன்<br>ii. க. பொ. த. (உ/த) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களில் ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | இலங்கை விவசாயக் கல்லூரியால் வழங்கப்பட்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>"ஹார்டி" தொழில்நுட்ப நிறுவனத்தில் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>"அக்குவைனாஸ்" கல்லூரியின் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட விவசாயம் தொடர்பான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றின் மூலமாக வழங்கப்பட்ட இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>அதற்குச் சமமான அல்லது அதனைவிடக் கூடிய சான்றிதழைப் பெற்றிருத்தல். | உரிய துறையில் உள்ள அனுபவம் |

**கவனிக்க**.- விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.3 ஏனைய தகைமைகள்.- அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல்.
* மிகச் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.
* நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவாறு உடல், உள ஆரோக்கியத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

4. சம்பளம்.- சம்பள குறியீட்டு இலக்கம் MN-01-2016.

சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 27,140.00 - 10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540.00.

**5. சேவையில் இணைப்பதற்கான நிபந்தனைகள்.-**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசினால் நியமிக்கப்படும் வகையில் அங்கத்துவ பணம் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) நியமிக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

(iii) தற்போது அமுலிலுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை நிபந்தனைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறை மாற்றங்கள் ஆகியவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிரப்பவோ அல்லது நிரப்பாமல் விடவோ நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

**6. விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் முறை.-**

(அ) இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அதற்கிணங்க விண்ணப்பப்படிவம் A 4 (21செ.மீ. × 30 செ. மீ.) அளவிலான கடதாசியின் இரு பக்கத்திலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 05 வரை முதலாம் பக்கத்திலும் 06 முதல் 07 (அ) வரை இரண்டாம் பக்கத்திலும் 07 (ஆ) முதல் 10 வரை மூன்றாம் பக்கத்திலும் எஞ்சியவை 04 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்குரிய தகவல்கள் தனது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அங்கு தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்களும், பூரணப்படுத்தப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும். மேலும், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க அமைவானதா என விண்ணப்பதாரி சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பப்படிவங்களை "விவசாயப் பணிப்பாளர் நாயகம், (நிருவாகக் கிளை 01), பழைய கலஹா வீதி, பேராதனை" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஆ) மேலே 03 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) மேற்குறிப்பிட்ட 3 ஆம் பந்தியின் அட்டவணையிலே குறிப்பிடப்பட்ட பதவிகளில் ஒன்றுக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 750.00 என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் வெவ்வேறாக பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்படல் வேண்டும். அத்தகைய கட்டணத்தை விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள பேராதனை மக்கள் வங்கியின் 057- 100179027204 என்ற கணக்கிலக்கத்தில் வரவு வைக்கவும். நாட்டின் யாதேனும் மக்கள் வங்கிக் கிளையில் பணத்தை செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டில் கழன்றுவிடாதபடி ஒரு மூலையில் மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். மேலும் உமது விண்ணப்பப்பத்திரத்தினதும் பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை மற்றும் முத்திரை ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(எ) பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அபேட்சகர்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, விண்ணப்பதாரியின் விலாசம் எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 23செ.மீ. ×10 செ.மீ. அளவிலான கடித உறை விண்ணப்பப்பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

*கவனிக்கவும்.*- விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்ப தாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ப அமையாத, முறையாகப்

பூர்த்தி செய்யப்படாத அல்லது முறையற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். திணைக்களத்தின் எவருடைய பெயருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கக்கூடாது என்பதுடன் அவ்வாறு அனுப்பிவைக்கப்படுகின்ற அல்லது நேரடியாகக் கையளிக்கப்படும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **பரீட்சை நடைமுறை.-**

(அ) முறைப்படி விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பிவைத்த அபேட்சகர்களுக்கு விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மூலமாக அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். அபேட்சகர்கள் தமக்கு குறித்தொதுக்கப்பட்ட நிலையத்திலே பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை கையளித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சையில் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தல் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரமாகி 4 அல்லது 5 நாட்கள் கழித்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு உரிய விபரங்களையும் (விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி, கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட திகதி, பற்றுச்சீட்டின் பிரதி கண்டிக்கு வெளியிலான பிரதேசங்களாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கம் ஆகியவற்றுடன்) எழுத்துமூலமான கோரிக்கை ஆகியவற்றை நிருவாக உத்தியோகத்தர், நிருவாகக் கிளை 1, விவாசயத் திணைக்களம், பேராதனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். உமது எழுத்துமூல கோரிக்கைக் கடிதத்தின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுடையதாகும்.

(இ) இப்பரீட்சையில் தோற்றுவதற்காக அபேட்சகர்களுக்கு ஏற்படும் பிரயாணச் செலவு அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) தான் தோற்றவிருக்கும் அனைத்துப் பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ; அல்லது

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ) பாடவிதானம்

| பதவி | பாடம் | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தியடைய வேண்டிய புள்ளி | பாடவிதானம் |
|---|---|---|---|---|---|
| 1. பண்ணை இலிகிதர் | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% | அபேட்சகரின் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், விஞ்ஞான அறிவு, விவசாய அபிவிருத்தி விளையாட்டு தொடர்பான நடப்பு மற்றும் பண்டைய விடயங்களுடன் பதவியின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டிய பொது அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். |

| பதவி | பாடம் | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தியடைய வேண்டிய புள்ளி | பாடவிதானம் |
|---|---|---|---|---|---|
| | விவேகப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% | கூட்டுதல், கழித்தல் உட்பட கணிதக் கோட்பாடு தொடர்பான விளக்கம், எண் கோலங்களை இனங்காணுதல், கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், எழுத்துக் கூட்டல், சரியான எழுவாய் பயனிலைத் தொடர்பைப் பொருத்தி வசனங்களை எழுதுதல், சரியாக மொழியைப் பயன்படுத்தல், பந்தி ஒன்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் தொடர்பாக அபேட்சகர்களின் தர்க்க ரீதியான திறனைப் பரிசீலிக்கும் வினாக்கள் ஆகியவற்றைக் கொண்டது. |

| பதவி | பாடம் | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தியடைய வேண்டிய புள்ளி | பாடவிதானம் |
|---|---|---|---|---|---|
| 2. விதை தொழில் நுட்பவி யலாளர் | பொது அறிவும் விவேகப் பரீட்சை யும் | 01 மணித்தியாலம் | 100 | 40% | அபேட்சகரின் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், விஞ்ஞான அறிவு, விவசாய அபிவிருத்தி விளையாட்டு தொடர்பான நடப்பு மற்றும் பண்டைய விடயங்களுடன் பதவியின் தன்மைக்கேற்ப இருக்க வேண்டிய பொது அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். கூட்டுதல், கழித்தல் உட்பட கணிதக் கோட்பாடு தொடர்பான விளக்கம், எண் கோலங்களை இனங்காணுதல், கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்தல், எழுத்துக் கூட்டல், சரியான எழுவாய் பயனிலைத் தொடர்பைப் பொருத்தி வசனங்களை எழுதுதல், சரியாக மொழியைப் பயன்படுத்தல், பந்தி ஒன்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் தொடர்பாக அபேட்சகர்களின் தர்க்க ரீதியான திறனைப் பரிசீலிக்கும் வினாக்கள் ஆகியவற்றைக் கொண்டது. |

| பதவி | பாடம் | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தியடைய வேண்டிய புள்ளி | பாடவிதானம் |
|---|---|---|---|---|---|
| | தொழில் நுட்ப வினாத் தாள் | 01 மணித்தியாலம் | 100 | 40% | (1) பொது விவசாயம்<br>I. காலநிலை, காலநிலை மற்றும் சுற்றுச் சூழல் மண்டலங்கள் அதன் தன்மைகள், தோட்டப் பயிர் சாகுபடி முறைகள்.<br>II. பயிர்ச்செய்கை பற்றிய சாதாரண அறிவு பரிந்துரைக்கப்பட்ட வகைகள் மற்றும் பல்வேறு அம்சங்கள்.<br>III. அரச விதைக் கொள்கை.<br>IV. விதை அமைப்புக் கலவை மற்றும் தரம்.<br>V. விதை உற்பத்திக் கோட்பாடுகள்<br>VI. விதை உற்பத்தி நடைமுறை மற்றும் கணக்கிடும் நிகழ்ச்சித் திட்டம்.<br>VII. விதை இறக்குமதி மற்றும் பிரித்து வழங்கல் குணாதிசய நிருவாக முறைகள்.<br>VIII. விதை அத்தாட்சிப்படுத்தல் நடைமுறைகள்.<br>IX. விதை தயாரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல்.<br>(2) விதை தொழில்நுட்பம் (விதை வர்க்கங்களின் உறங்கு நிலை, விதை சுகாதாரப் பரிசோதனை, முளைத்தல் பரிசோதனை, தூய்மை, பௌதீகத் தூய்மை, கையிருப்பு தரப் பரிசோதனைக் கூடத்தைச் சுத்தப்படுத்தல், ஏனைய தன்மைகளைப் பரீட்சித்தல்.) |

* பண்மை முகாமையாளர், விதை தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த அபேட்சகர்களில் தகைமைகளின் அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மூன்று (03) மடங்கு அபேட்சகர்களை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் கீழ்வரும் துறைகளுக்கு மொத்தப் புள்ளிகள் 100 வழங்கப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :

I. மேலதிக கல்வித் தகைமைகள் ;
II. மேலதிக தொழிற் தகைமைகள் ;
III. உரிய துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் ;
IV. மொழித் தேர்ச்சி ;
V. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறமை.

(ஊ) மொழி மூலம்.- பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முழுமையான எடுகோளின் பேரில் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இப்பதவிக்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளமைக்கான அங்கீகாரமாகக் கருதப்பட மாட்டாது.

(ஏ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் அல்லது அவள் உட்பட வேண்டியேற்படும்.

(ஐ) **பரீட்சை நடாத்தப்படும் இடம்**.- இப்பரீட்சை விவசாயத் திணைக்களத்தினால் கண்டி நகரிலுள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

8. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.-

(அ) விதை தொழில்நுட்பப் பதவிக்கான எழுத்து மூலப் பரீட்சைத் திறமை ஒழுங்கிற்கமைய திறந்த அடிப்படையிலான வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கு (03) எண்ணிக்கையான அபேட்சகர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ஆ) பண்ணை எழுதுநர் பதவிக்கான எழுத்து மூலப் பரீட்சைத் திறமை ஒழுங்கிற்கமைய திறந்த அடிப்படையிலான வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கு (03) எண்ணிக்கையான அபேட்சகர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ii) விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலுக்கிணங்க தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமை உறுதிசெய்யப்படும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியின் அபேட்சகத்தன்மை அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் பூர்த்தி செய்யப்படாமல் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்திருப்பினும் நேர்முகப் பரீட்சையில் அவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவருடைய விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

(iv) பிழையான தகவல் மற்றும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து எவரேனும் நியமனத்தைப் பெற்ற போதிலும் அது தொடர்பில் தெரியவரும் பட்சத்தில் உடனடியாக அவருடைய நியமனம் நிராகரிக்கப்படுவதுடன் அவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

9. அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுதல் வேண்டும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படுமிடத்து அது தொடர்பான தீர்மானம் நியமன அதிகாரியினால் எடுக்கப்படும்.

11. இவ் அறிவித்தலையும் மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk வெப் தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

12. மும்மொழிகளிலுமான இவ் அறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

கலாநிதி டபிள்யூ. எம். டபிள்யூ. வீரகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐

(அலுவலக உபயோகத்திற்காக)

**விவசாயத் திணைக்களத்தின் .................... பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

01. பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மொழி மூலம் சிங்களம் - 1 ☐
தமிழ் - 2

02. விண்ணப்பிக்கும் பதவி : ..........................................................................................................................................................

03. பெயர் :

3.1 முதல் எழுத்துக்களுடன் பெயர்: ..................................................................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) உதா:- GUNAWARDHANA, H. M. S. K. .........................................................

3.2 முழுப் பெயர்: (சிங்களத்தில்/தமிழில்) ...............................................................................................

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

04. நிரந்தர முகவரி
4.1 ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :..........................................................................................................................

4.2 சிங்களத்தில்/தமிழில் :....................................................................................................................................

4.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.........................................................
..........................................................................................................................................................................

4.4 வதிவிட மாவட்டம் :.......................................................................

4.5 பிரதேச செயலாளர் பிரிவு :...........................................................

05. பெண்/ஆண்
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை எழுதவும்)

06. 6.1 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

6.2 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

6.3 விவாகமானவர்/விவாகமாகாதவர்
விவாகமாகாதவர் - 1 ☐
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை எழுதவும்)

07. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :
(அ) க. பொ. த. (சா./தர) பரீட்சை:

(i) வருடமும் மாதமும் :.............................................................
(ii) பரீட்சை இலக்கம் :..............................................................
(iii) மொழிமூலம் :.......................................................................

(iv) பரீட்சை பெறுபேறு:

முதலாம் முறை

| | | சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

இரண்டாம் முறை

| | | சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

(ஆ) க. பொ. த. (உ./தர) பரீட்சை:

(i) வருடம் மற்றும் மாதம் :................................................
(ii) பரீட்சை இலக்கம் :......................................................
(iii) மொழி மூலம் :..........................................................
(iv) பரீட்சை பெறுபேறு :

| | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

8. தொழிற்தகைமைகள் : (பண்ணை இலிகிதர் பதவிக்காக தொழிற்தகைமைகள் அவசியமற்றது.)

| டிப்ளோமா | டிப்ளோமா வெளியிட்ட நிறுவனத்தின் பெயர் | சித்தி பெற்ற வருடம் | மொழி | பரீட்சை இலக்கம் | டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. நீதிமன்றத்தின் முன் தாங்கள் ஏதேனும் தவறுக்காக குற்றவாளியாகியுள்ளீர்களா :- .......................................
ஆம்/இல்லை
ஆம் எனில், விபரங்களை குறிப்பிடவும்
........................................................................................................................................................

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கி கிளை :........................
10.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :......................
10.2 பற்றுச்சீட்டு இலக்கம் :..........................
10.3 கட்டணம் :...........................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இக் கூட்டினுள் கழன்றுவிடாதவாறு ஒரு பக்கத்தை மாத்திரம் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.) |

*11.* விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகைமையற்றவனாகக் கருதப்படுவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் அது தெரியவரும்பட்சத்தில் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது நியமனம் நிராகரிக்கப்படும் என்பதையும் நன்கு அறிவேன், மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பில் எடுக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அபேட்சகர்கள் கட்டுப்படுதல் மேலும் என்னால் விண்ணப்பிக்கப்படும் ஒரு பதவிக்காக ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே முன்வைக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :...............

..............................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*12.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :-

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற ................................................................ எனும் பெயரையுடையவர், எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், இவர் ................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..............................,
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :...............................
பதவி :...............................
முகவரி :...............................
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)

**குறிப்பு** : தற்போது அரச பதவியில் இருப்பவர் இப் பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் தமது கையொப்பத்தை தமது நிறுவனத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலரினூடாகவும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர், பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், நீதிபதி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர நிருவாக சேவைத் தர அலுவலர் ஊடாக அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*13.* தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றுவோருக்காக (தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)

மேலே விபரங்கள் காட்டப்பட்டுள்ள விண்ணப்பதாரர்/விண்ணப்பதாரி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர்/ தகுதியற்றவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், அவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவரை இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி:......................

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :...............................
பதவி :...............................
முகவரி :...............................
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)

*11-382*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.